அமுது

A Siddha Medical Research Monthly.

Vol. 4. | JUNE, 1955 | No. 3.

AMUTHU

An Anglo-Tamil Monthly Journal, for the advancement of Medicine, Indigenous to India, particularly—the Siddha System of South India which has its own uniqueness and greatness. Published on the last week of every month. Articles in English or Tamil from Research scholars or physicians on the Siddha System and its marvellous preparations are always welcome. Advertisement rates sent on application. Annual Subscription: India Rs. 4. Other countries Rs. 5

Vol. I Vol II Vol III A few copies are still available for library or reference. The full set of Vol, I or Vol. II or Vol III will be sent post free by registered post on receipt of Rs. 4/- only. All three Vols. Rs. 10/- only. No. V. P.s.

Single copies of Any of the available numbers sent post free As. 6, except the Leprosy special number As. 8. post free.

Address all communications to

H. Devadoss, B.A., L.T., M.T.Sc.,
Managing Editor, Amuthu,
Dasarpuram, P.O. near Madras. (South India)

"அமுது"

முதன் மூன்று வருஷத்திய வால்யம்-Vol. 1, (5-2-'53) Vol. 2, (5-3-'54) Vol. 3, (5-4-'55) இவை தனித்தனியாக பைண்ட் செய்யப் பட்டது. ஒரு வருஷத்தியது தபால் சார்ஜ் உட்பட ரூ 4/-; 3 வருஷ புத்தகங்களும் சேர்ந்து ஆர்டர் செய்தால் ரூ 10/- க்கு அனுப்பப் படும். தமிழ் வைத்திய வாசகசாலைகளுக்கு அவசியம் வேண்டியது.

4-வது வருஷம் (ஏப்ரல் 55-மார்ச்சு 56) வருஷ சந்தா ரூ 4/- மணியாடர் செய்து உங்களுடைய விலாசம் பதிவு செய்து கொள்ளுங்கள் மாதாமாதம் பத்திரிகை அமுது ஒழுங்காக அனுப்பப்படும்.

"அமுது" மானேஜர், தாசர்புரம் P.O. தின்னனூர். R.S.

மதராஸ் ஸ்டேட் இண்டியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாபரேடிவ் பார்மஸி அண்டு ஸ்டோர்ஸ், லிமிடெட்.

X 185 லேடிஸ் பிரிட்ஜ் ரோடு

அடையாறு, :: மதராஸ்-20.

பிரஸிடெண்ட்: வைத்திய ரத்ன காப்டன்

G. ஸ்ரீனிவாசமூர்த்தி

பி. ஏ., பி. எல், எம். பி. ஸி. எம்.

1. ஆயுர்வேத, சித்த, யூனனி தேசிய மருந்துகள், சாஸ்திரீக முறைப்படியும், தக்க மேற்பார்வையுடனும் தயார் செய்து, தேசீய மருந்துகளை கையாளும் டாக்டர்களுக்கு சப்ளை செய்ய மதராஸ் ஸ்டேட் இண்டியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாபரேடிவ் பார்மஸி அண்டு ஸ்டோர்ஸ் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. டாக்டர்களுக்கு வேண்டிய சுத்தமான மருந்து சாமான்களும் மூலிகைகளும் சப்ளை செய்யப்படும்.

2. இந்திய யூனியன் முழுவதிலுமுள்ள, தேசீய இந்திய வைத்தியர்களும், இத்ரவிதமான பட்டம் பெற்ற தேசீய வைத்தியர்களும் ஷை சொஸைட்டியில் மெம்பராகச் சேரலாம்.

3. ஷை சங்கத்தில் பங்கு ஒன்றுக்கு ரூபாய் 5, பிரவேசக் கட்டணம் அணு 0-4-0ம், ஒரு மெம்பர் 1000 பங்குகள் வரை எடுத்துக்கொள்ளலாம்.

4. தேசீய வைத்தியர்கள் யாவரும் மேற்கண்ட சொஸைட்டியில் சேர்ந்து தங்களுக்கு வேண்டிய மருந்துகளை வாங்கி சொஸைட்டியை அபிவிருத்தி செய்ய வேணுமாய்க் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

எமது பிரசுர வெளியீடுகள்:

1. "வைத்ய யோக ரத்னவளி": ஆங்கிலத்திலும், தெலுங்கிலும் பிரசுரிக்கப்பட்டவை. கவர்மெண்டாரால் அனுமதிக்கப்பட்ட வைத்திய முறைகளும், மற்ற முறைகளும்; மருந்துகளின் நன்மைகளும் குணங்களும் அடங்கியவை. ஆங்கில பிரதி விலை ரூ. 6-; தெலுங்கு பிரதி ரூ. 6—8—0. தபால் கட்டணம், பேக்கிங் ஒவ்வொன்றுக்கும் முறையே ரூ. 1—2—0; பிரதி விலையுடன் முன்பணமாக அனுப்ப வேண்டும்.

2. "யூனனி பார்மகோபியா": இது யூனனி வைத்திய முறைகளையும், உபயோகங்களையும் குறிப்பிடும் நூல். ஆங்கிலத்தில் பிரசுரிக்கப்பட்டது. பிரதி ஒன்றுக்கு ரூ. 3/- தபால் கட்டணம் பிரத்தியேகம்.

அடையாறு }
மதராஸ்-20. }

Y. கொண்டல் ராவ்,
செக்ரடரி. எல். ஐ. எம்.

AMUTHU

Anglo - Tamil Monthly

Published on the 25th of every month: Devoted to Research in Indigenous medicine, particularly SIDDHA and for the dissemination of facts on Healthy living, Correct Diet & Nutrition research.

Vol. 4 | JUNE, 1955 | No. 3

SIDDHAS AND DIET.

The uniqueness of the Siddha System lies also in its greater appreciation and practical use of dietetic methods in the treatment of diseases by experienced Siddha physicians. The sister system of Ayurveda of Northern India being very closely connected with the Siddha system for centuries have adopted some of its scientific principles, but in practice, they are not so much followed as in the South for reasons which will be explained in subsequent articles.

In our article on KOWSIGAR KULAMBU (P. 26.) a unique Siddha preparation for rabid dog bite, we have given in detail a cure of one particular case; on further inquiry we have the following very valuable information:-

The family members of the patient had been out for a boar-hunt; and they bagged one as a result of their efforts; and the whole family and friends in the village had a good feast of the beast. This patient was one of those who had a good feed of pork. This man it appears had a dog-bite two months back and it was left unnoticed and untreated except for some external local treatment for the bleeding wound.

The rabid dog-poison which was dormant till then, suddenly flared up after the pork feed, and the symptoms given in the said article, developed the next day; the

209561

case would have proved fatal but for the Siddha treatment given with the help of KOWSIGAR KULAMBU.

Scientific Research needed.

Here is a definite subject for research for medical laboratories and workers. There is a close connection between dogbite poison and pork and fowl meat. The diet prohibited for nearly six months, includes the above two items. A number of cases have been reported which have had relapses, some serious, particularly swelling of the whole body, after the neglect of this important dietetic precaution.

Fowl meat and chicken essence - is a matter for serious consideration, for patients in their convalescent stage. Many typhoid patients get a relapse, even to-day, even in government hospitals, where the best medical attention is available. The relapse may invariably be traced to irregularities in dieting, particularly using certain forms of diet, not suitable to the patient. This is a matter for serious research work. Pork and fowl meat have something definitely injurious to health of cerain types of patients - a matter for research

The Western system, we are glad to point out, does not steer clear of the dietetic principles in adapting food materials as auxiliary to medical treatment, as will be seen in the laborious research work done by famous dieticians like Dr. Kellog. For the information of our research workers on diet, we shall in our next issue publish a series of different kinds of diet, which is the foundation on which the Siddha system is built.

To be continued.)

Tanjore District Siddha Conference.

Through the untiring efforts of Vaidyaraj Nagaraja Mannayar, and Dr. M. Pattabiraman a meeting of the Tanjore, District Siddha Sangam has been arranged to take place on Sunday the 26th of June 1955 at Tanjore, under the presidency of the President, Central Medical Council of Madras Mr. H. Devadoss. A report of its work will be published in our next issue.

Extracts from a Speech delivered by

Sri. V. BALARAMIAH, B.A., B.L.

Subordinate Judge, Kumbakonam

while inaugurating the Bi-Centinary Celebrations

on 10—4—55.

"The principles of HOMOEOPATHY very closely resemble the system of Ayurveda and Siddha. According to the latter system, diseases occur when the Thridosha gets unbalanced. Thridosha is "Vatha, Pitha, and Slethumam or Kapam." The pressure or velocity of these three in the Nadi or pulse have been prescribed as I, $\frac{1}{2}$, and $\frac{1}{4}$ respectively and all kinds of diseases emanate when these proportions get disturbed. The so-called scientists laugh at this Thridosha theory, because, they do not understand it. They want this theory to be explained scientifically or rather in their own way. I wish to humbly submit before you, that if the theory has to be translated into English, it will be thus:— Vadham=Rheumatism or paralysis, or that which produces nervous diseases, Pitham=Bile. Slethumam or Kapam=Phlegm. This English translation would only lead to absurdities. Slethumam is not phlegm and Pitham is not bile. They mean a lot more for the Ayurvedic Physician, Only he can understand it, and it cannot be explained in terms of English, with their full significance.

In the same way according to Dr. Hahnemann, there are only three chronic diseases that attack the human race and these are Psora, Syphilis and Sycosis and that all diseased conditions must be either due to Psora, Syphilis or Sycosis. The real cause of disease in mankind must be, according to Dr. Hahnemann, one of the three above named conditions which are called Miasms. You will now find that the systems of Ayurveda and Siddha have got close similarity with the system of Homeopathy. Another outstanding similarity is in the potency of the drug. The theory of atoms was

discovered even ages ago. One atom is enough to cure any disease That is the reason why the Siddhas used calcinised atomic Bhasmams. Similarly, Dr. Hahnemann found that the less the dosage the more effective it is. This idea perfectly satisfies our commonsense".

Salem District Siddha Conference.

Due to the untiring efforts of Siddha Dr. Ramanujachary of Salem, the District Siddha Sangam has been revived and a very successful Conference was held at Salem Theosophical Hall on Sunday the May 22-nd 1955. Pandit Anandam unfurled a Siddha Flag: Sri Manickavelu Naicker M L. A. opened the Conference; Siddha Dr C. N. Kuppuswamy Mudaliar presided at the Conference and worthily conducted the proceedings of the Conference. Reports of various Sangams were read by the secretary; many important resolutions were passed at the evening session and certificates were awarded to practitioners who have put in a service of a number of years, in the Salem District as physicians at various Siddha Dispensaries. Full text of the resolutions will be published, as soon as it is received from the secretary. The president Central Siddha Medical Council and the treasurer Vaidyaraj T. C. Sundaram were present and took part in the proceedings of the above Salem Conference.

When your patients Suffer from

WHOOPING COUGH

Always prescribe Hari Dasar "KAKWA", the renowned Siddha Remedy and you will be surprised with the speedy good results. Rs. 1—4—0: Postage up to three bottes Annas 15/ only.

Dasar's Laboratory, Dasarpuram. P.O. Tinnanur. R.S.

அமுது

தாசர்புரம், சித்த ஆராய்ச்சிக் கழக வெளியீடு

சுகாதாரம், உணவு ஆராய்ச்சி, நல்வாழ்வு இவற்றை அடிப்படையாகக் கொண்ட வியாசங்கள் வெளிவரும்.

ஆசிரியர்:— H. தேவதாஸ், B.A., L.T., M.T.SC.,

உதவி ஆசிரியர்: M. அமிர்தலிங்கம் R.I.M.P.

மலர் 4 | ஜூன், 1955 | இதழ் 3

சென்னை இராஜ்ய சித்தவைத்திய மகாநாடு-1955

1955-ம் ஆண்டைய சென்னை இராஜ்ய சித்த வைத்திய மகா நாடு சென்ற மேமீ 7, 8 தேதி சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் அரக்கோணம் காந்தி ரோட்டில் அமைந்துள்ள சென்ட்ரல் ஸ்கூல் மண்டபத்தில் மிக சிறப்பாக நடை பெற்றது. சென்னை இராஜ்யத்தின் தெற்கு முனை முதல் வட கோடி வரையிலிருந்தும் 200-க்குக் குறையாத பிரதிநிதிகளும், மற்றும் பலர் பார்வையாளர் களாகவும் வந்திருந்து மகா நாட்டைச் சிறப்பித்தனர்.

முதல் நாள் மகா நாடு 7-5-55 சனிக்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்ப மாயிற்று. திருவள்ளூர் பிரபல வக்கீலும் அகஸ்தியர் பரிபாஷை, ஞான வெட்டி ஆகிய வைத்திய நூல்களின் ஆராய்ச்சியாளருமான திரு C. V. நாயுடு அவர்கள் சித்தர் கொடியினை ஏற்றி வைத்தார்.

தெய்வ வழிபாட்டிற்குப் பின் சித்தர் கொடியின் தத்துவத்தைப் பற்றியும், சிறப்பைப் பற்றியும் விவரித்ததோடு அக்கொடியின் நடுவே பொறிக்கப் பட்டுள்ள "சி" என்னும் தமிழ் எழுத்து தெய்வீக சித்தர்களின் மகிமைக்கும், அவர்கள் வளர்த்த கலைக்கும் அடையாளமாகத் திகழ்கின்ற தென்பதையும் குறிப்பிட்டு விளக்கினார். பின்னர் டாக்டர் H. தேவதாஸ் அவர்கள், தமிழ் நாட்டின் பல் வேறு ஜில்லாக்களிலிருந்தும், சித்தூர் ஜில்லாவிலிருந்தும் வந்திருந்த சித்தவைத்தியப் பிரதிநிதிகளை வரவேற்றுப் பேசினார். சித்த வைத்தியம் பொதுவாகத் தென்னிந்தியா

வுக்கும் சிறப்பாகத் தமிழ் நாட்டிற்கும் உரியதென்பதையும் குறிப்பிட்டதோடு, சித்த வைத்தியர்களுக்கு குறிப்பாக கிராமாந்திரப் பகுதிகளிலுள்ள சித்த வைத்தியர்களுக்குள்ள பல குறை பாடுகளையும், வசதியின்மையையும் எடுத்துக் காட்டி மகா நாடு இவைகளைப் பற்றி தீவிர கவனஞ் செலுத்தி அவைகளை வகுக்க வேண்டுமெனவும் அதனால் நோய் நொடிகளினால் பெரிதும் அல்லற்படும் நாட்டுப்புற ஏழை மக்கட்கு மேலும் நல்ல முறையில் பயனளிக்கத் தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

பின்னர் திரு A. சண்முக வேலன் M.A., அவர்கள் மகா நாட்டின் சார்பாக கேட்டுக் கொண்டதற்கிணங்க கோவை டாக்டர் C. K. குமாரசாமிப் பிள்ளை அவர்கள் தலைமை வகித்து சொற் பொழிவாற்றினர். இன்றுள்ள நிலையில் இதே நிலை நீடித்தால் இன்னும் 10 ஆண்டு காலத்தில் சித்த வைத்தியத்தின் தாயகமான சென்னை இராஜ்யத்திலேயே சித்த வைத்தியம் இல்லாது மறைந்து விடுமென்று நினைக்கக் கூடிய அபாய நிலை இருந்து வருவதாயும் காரணம் அரசியலார் நடத்தி வரும் நாட்டு வைத்தியக் கல்லூரியினின்று வெளி வரும் வைத்திய மாணவர்கள் முற்றிலும் சித்தவைத்தியத்திலும் திறமை பெற்றிருக்கவும் இல்லை அல்லோபதி (ஆங்கில முறை) வைத்தியத்திலும் திறமை பெற்றிருக்க வில்லை, இரண்டும் கெட்டானை இந்நிலையில் சித்த வைத்தியம் உருப்படுவதற்கா என்றும் ஆகவே இக் குறைபாட்டை அகற்ற நாட்டு வைத்தியக் கல்லூரி அப் பெயருக்கு உரித்தானதாக விளங்க வேண்டுமெனின் சித்த வைத்தியத் துறையில் பயிற்சி பெற்றவர்களும் அதே சமயத்தில் மேனாட்டு முறை உடற்கூறு உடலியல் முறையிலும், நோய்களைப்பரிட்சித்தறியும் விஞ்ஞானத் துறையிலும் பயிற்சியுள்ளவர்களுமான சித்த வைத்தியர்களையே அமர்த்தி பாடம் கற்பிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும், சித்த வைத்தியம் நவீன முறை ஆராய்ச்சிகளை புறக்கணிப்பதில்லை யென்றும் சித்தர்களே சிறந்த விஞ்ஞான ஆராய்ச்சியாளர் ஆகத்தான் திகழ்ந்தார்கள் என்றும் விளக்கினர்.

பின்னர் பேசிய வித்வான் ஆ. சண்முகவேலன் M.A. அவர்கள் தமிழ் வைத்தியம் கிறிஸ்து பிறப்பிற்கு 3000

ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் நாட்டில் நிலவிய தென்றும். ஆதியில் அது எவ்வாறு தோன்றிற்றென்றும் ஆதாரங்கள் காட்டினர். மேலும் சித்த வைத்தியம் ஆயுர் வேதத்தினின்றும் எவ்வாறு மாறு பட்ட தென்பதையும் ஆயுர் வேதத்தை விட எதுதுணைச் சிறப்பும் திறனும் உடையதென்பதையும் விளக்கிக் கூறினர்.

மகா நாட்டின் சார்பில் நடை பெற்ற சித்த மருந்து கண் காட்சியையும், வைத்திய நூல் கண் காட்சியையும் சித்த யோகி சுவாமி சுந்தர மகாலிங்கமவர்கள் திறந்து வைத்தார்; அது காலை அவர் சிறந்த சித்த மருந்துகள் சிலவற்றை-குறிப்பாக சரப ராஜ மாத்திரை, பகீரதித் தைலம் ஆகியவற்றைக் - குறிப்பிட்டு இவைகளில் சித்த வைத்தியர்கள் தங்கள் கவனத்தைச் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

மாலை மகா நாடு கோவை பிரபல வக்கீலும் பிரபல சித்த வைத்தியக் குடும்பத்தில் தோன்றிய வரும் சித்த வைத்திய ஆராய்ச்சியாளருமான திரு. R. கஸ்தூரி B.A.B.L., அவர்கள் தலைமையில் தொடங்கியது. அவர் தமது தலைமையில் குறிப்பிட்ட தாவது: சென்னை சர்க்கார் சித்த வைத்தியத்துறை சம்மந்தப் பட்ட வரையில் தங்கள் கொள்கையை மாற்றிக் கொண்டு தென்னிந்தியாவின் சிறந்த கலையான சித்த வைத்தியத்திற்கு அதிக ஆதரவும், ஊக்கமும் அளிக்க வேண்டு மென்றும் கேட்டுக் கொண்டார்.

பின்னர் சீயாழியைச் சேர்ந்த வைத்தியபூபதி T.நாராயண சாமி அய்யர் அவர்கள் திருவாரூர் வைத்திய பூபதி G. கண்ணு சாமிப் பிள்ளை அவர்கள் அனுப்பிய கட்டுரையொன்றினை வாசித்தார். திரு நாராயணசாமி அய்யர் பேசுகையில் வட நாட்டில் வழங்கப்படும் ஆயுர் வேதம், தென்னாட்டின் பெருங்கலையான சித்தவைத்தியத்தினின்றும் தோன்றிய தென்றும் அதற்கு அத்தாட்சியாக பண்டைத் தமிழ் நூல்களினின்று பல ஆதாரங்களைத் தெள்ளத் தெளிய எடுத்துக் காட்டினர்.

பின்னர் கோவையைச் சேர்ந்த திரு ராமு வைத்தியர் நாடிநிதானம் என்பதைப் பற்றிப் பேசினர். நாடிநிதானம் சித்த வைத்தியத்தின் சிறப்பான பகுதி யென்றும் அவர் எடுத்துக் காட்டினர். தொடர்ந்து துறையூர் வைத்திய பாஸ்கர் M. R. காசிநாதன் அவர்கள் "சித்த வைத்தியமும்

சென்னை அரசாங்கமும்" என்னும் பொருள் பற்றிப் பேசிய போது சித்த வைத்திய வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும், காங்கிரஸ் தொண்டன் என்ற முறையில் நாட்டு விடுதலைப் போரில் ஈடுபட்டதைப் போன்று தன்னாலான தியாகஞ் செய்யத் தயார் என உறுதி கூறினார்.

மாலை மகா நாட்டிற்குப் பின் இரவு 10 மணி வரையில் விஷயாலோசனைக் கமிட்டி கூடி மறு நாள் மகா நாட்டில் நிறைவேற்றுவதற்கான தீர்மானங்களை விவாதித்து உருவாக்கியது.

2-வது நாள் மகா நாடு: 8-5 55 ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணிக்கு மீண்டும் மகா நாடு, மகா நாட்டுக்குத் தலைமை தாங்குவதாயிருந்த சென்னை சர்க்கார் இந்திய வைத்தியக் கல்லூரி விரிவுரை யாளர் Dr. உத்தமராயன் H. P. I. M. அவர்கள் எதிர்பாராத வகையில் வர இயலாமையால் கோவை டாக்டர். C. K. குமாரசாமிப் பிள்ளையவர்கள் தலைமையில் ஆரம்பமாகியது.

கடவுள் வழி பாட்டுக்குப் பின்னர் Dr. சேது ராவ் அவர்களைப் பேசும் படி தலைவர் கேட்டுக் கொண்டார். சித்த வைத்தியர் பயன் படுத்தும் தென்னிந்திய மூலிகைகள் என்னும் பொருள் பற்றி டாக்டர் சேது ராவ் பேசுகையில் ஆடா தோடை, குப்பை மேனி முதலியவற்றின் சிறந்த பயன் பற்றியும் அவர் குறிப்பிட்டார்.

பின்னர் டாக்டர் அமிர்தலிங்கம் அவர்கள் "திரிகடுகு" என்னும் பொருள் பற்றிப் பேசினார். இவைகளைப் பற்றி பழைய சரித்திர ஆராய்ச்சி நூல்களிலிருந்து பல மேற் கோள் காட்டிப் பேசியது மிகவும் கவர்ச்சிகரமாகவும் அறிவூட்டு வதாகவும் இருந்தது. பின்னர் பேசிய திரு. M. S. குருமூர்த்தி யவர்கள் சித்த வைத்தியத் தோடு உலகிலுள்ள மற்ற வைத்தியங்களை தாரதம்மியப் படுத்தி மிகவும் விளக்கமான விரிவுரை யாற்றினார், மற்ற வைத்தியத்துறைகளில் காணப்படும் சிறப்புகள் சித்த வைத்தியத்திலிருந்தே பெறப் பட்டவை என்பதை தக்க ஆதாரத்துடன் விளக்கினார். பின்னர் திருத்தணி திரு. சடகோபாச் சாரியார் அவர்கள் "வைத்தியமும் சோதிடமும்" என்னும் பொருள் பற்றி சிறப்பாகப் பேசினார். செங்குன்றம் (ரெட்ஹில்ஸ்) சித்த வைத்தியர் திரு. V. கலியாணசுந்தரம் அவர்கள் "சித்த மருந்துகளும் எனது அனுபவமும்" என்பது பற்றி

பேசிய போது சில முக்கிய சித்த மருந்துகள் பற்றி தான் ஆராய்ந் தறிந்த உண்மைகளை எடுத்து விளக்கினர்.

பின்பு தலைவர் தனது முடிவுரையில் அதுவரையில் பேசிய பேச்சாளர்கள் குறிப்பிட்ட சில முக்கிய பகுதிகளை விளக்கிய தோடு சித்தவைத்தியர்கள் தங்கள் தாழ்வு மனப் பான்மையை விட்டொழிக்க வேண்டு மென்றும் மேலும் மேலும் துருவித் துருவிக் கற்று ஆராய்ச்சி செய்தால் தான் சித்தர்களுடைய சிறப்பும் சித்த மருந்துகளின் பெருமையும் புலப் படக் கூடு மென்றும் சித்த மருந்துகளில் பல உலக மக்களுக்குப் புலனுகாவாறு மறைந்து கிடைக்கின்ற தென் றும் கூறினர்.

பிற்பகல் மகா நாடு திருநெல்வேலி வித்துவான் E. M. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் தலைமையில் மாலை 2 மணிக்குத் தொடங்கியது. தலைவர் தனது முன்னுறையில் சித்தர்கள் கடவுள் நம்பிக்கை கொண்டவர்கள் என்றும் மருந்து செய்யத் தொடங்குமுன்பும், நோயாளிக்கு மருந்து கொடுக்கத் தொடங்குமுன்பும் கடவுளை வேண்டியே தொ டங்கினர்கள் என்றும் அதைப் பின் பற்றியே தாம் இம் மகா நாட்டையும் கடவுள் வணக்கத்துடன் ஆரம்பிக்கப் போவதாகவும் கூறி

"அகர முதல வெழுத்தெல்லாம்
ஆதி பகவன் முதற்றே உலகு" எனக் குறள் முதலடியை கடவுள் வாழ்த்தாகக் கூறினர்.

பின்னர் சித்த யோகி சுந்தர மகாலிங்கம் அவர்கள் "இரசமணி" எனும் பொருள் பற்றித் தெளிவாகப் பேசி னர். அதன் பின் சென்னை பிக்ஷு சுவாமிகள் மாணவி யும், சரஸ்வதி சங்கத்தைச் சேர்ந்தவருமான திருவாட்டி எஸ். கமலம்மாள் அவர்கள் "குழந்தை வைத்தியம்" எனும் பொருள் பற்றி தனது அனுபவங்களை மிகத் தெளிவுபட எடுத்துக் கூறினர். பின்னர் "முப்பு" எனும் பொருள் பற்றி அரக்கோணம் வைத்யராஜ் T. C. சுந்தரம் பிள்ளை அவர்கள் பேசினர். (இது பின்னர் அமுதுவில் வெளி வரும்.) புழல் கண்ணுசுவாமி ஆசிரமத்தைச் சேர்ந்த திரு. V. K. வேலாயுதம் என்பவர் "சித்த மருத்துவமும் சோதி டம் கணித்தலும்" எனும் பொருள் பற்றி அழகாகப் பேசி னர். பின்னர் பேசிய தென் காசி வைத்திய பூபதி K. M. சுவாமி அவர்கள் மகா நாடு மருந்து பொருட் காட்சிக்கு

தான் கொண்டு வந்திருந்த கிடைத்தற்கரிய பல அருமையான மூலிகைகளின் உபயோகத்தை சித்தர் நூல்களின் ஆதாரத்தோடு விளக்கிப் பேசினர்.

பிறகு தலைவர் திரு. E. M. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் மகா நாட்டின் முக்கிய வேலையாகிய தீர்மானங்கள் நிறை வேற்றுவதைப் பற்றிக் குறிப்பிட்டு தீர்மானங்களை விரிவாக விவாதித்து நல்ல முடிவுக்கு வரவேண்டு மென்று கேட்டுக் கொண்டார். காலஞ் சென்ற சித்த வைத்தியர் திரு P. வடிவேலு முதலியார் அவர் காலமானதற்கு அனுதாபம் தெரிவிக்கும் முதல் தீர்மானம் தலைவர் அவர்களால் கொண்டு வரப்பட்டு எல்லோரும் எழுந்து நின்று திரு முதலியாரின் ஆன்மா சாந்தியடைய வேண்டும் என்ற பிரார்த்தனையுடன் நிறை வேறிற்று.

(தீர்மானங்கள் விவரம் சென்ற மாத இதழ் "அமுது" வில் வெளி வந்துள்ளது.)

தலைவர் தனது முடிவுரையில் சித்தர்களின் இரசாயன ஆராய்ச்சிகள், குறிப்பாக போகர், அகத்தீசர் முதலியோர்களின் ஆராய்ச்சிகள் ஆழங்காண முடியாத அத்துணை சிறப்பும் பெருமையும் உடைய தென்றும் தமிழ் நாட்டில் குறைந்த பட்சம் 3—4. இடங்களிலாவது சித்தர் மருந்துகள் ஆராய்ச்சி நிலையங்கள் ஏற்படுத்த வேண்டுமென்று வேண்டி கொண்டதோடு அவ்வாறு நிலையங்கள் திறக்கப் பட்டால் மாத்திரம் சித்தர்கள் இறவாப் புகழுடைய தமிழ் நூல்களில் வகுத்துள்ள வழி துறைகளின் படி ஆராய்ச்சி நடத்தி அவற்றின் சிறப்பினை மக்களுக்குப் பயன் படுத்த முடியும் என்றும், அண்ணுமலைப் பல்கலைக் கழகமும், சென்னை பல்கலைக் கழகமும், சென்னை சர்க்காரும், மத்திய சர்க்காரும் ஒத்துழைத்து தென்னிந்தியா முழுவதும் பற்பல சித்த வைத்திய ஆராய்ச்சி நிலையங்களையும், சித்த வைத்திய கலா சாலைகளையும் நிறுவ வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்,

அத்தகைய ஆராய்ச்சி நிலையங்கள் நிறுவப் படும் போது சித்த வைத்தியத்துறையில் சிறந்த முக்கியமானவர்களான சித்த வைத்தியர்களையும் கொண்ட ஒரு கழகத்தின் ஆலோசனைக் கிணங்க அத்தகைய நிலையங்கள் தங்கள்

[56-ம் பக்கம் பார்க்க]

சரபராச மாத்திரை.

சித்த வைத்திய வளர்ச்சி நிலையம்

சரபராச மாத்திரை நோய்களுக்கு, அனுப்பானமும் உபயோகமும்;

கொடுக்கும் அனுபவ முறை:-1வயதுக்குட் பட்டவர்களுக்கு $\frac{1}{2}$ மாத்திரையும், 5 வயதுக்குட் பட்டவர்களுக்கு 1 மாத்திரையும், 10 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு 2 மாத்திரையும், 20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு 3 மாத்திரையும் முறையே $\frac{1}{4}$, $\frac{1}{2}$, $\frac{3}{4}$, 1 அவுன்ஸ் சாற்றில் கொடுக்கவும்.

குறிப்பு

இந்த மருந்தை அனுப்பானப் படி உபயோகித்து வந்தால் மனிதர்களை கஷ்டப்படுத்தும் பலவித நோய்கள் தீரும்.

வேறெந்த அவுடதத்திற்கும் வசப்படாத தாயினும் இந்த மருந்திற்கு வசப்பட்டுப்போம். இதில் எல்லாவகை விசதர்மமுள்ள சரக்குகளும் சேர்ந்திருப்பதால் தேகசுபாவ பிரகிருதிகளை நிச்சயித்து உபயோகிக்க வேண்டியது அவசியமாகையால் ஆரம்பத்தில் மிகவும் குறைந்த அளவாக உபயோகித்து தினே தினே கிரமேனுவாக அதிகப் படுத்தி வர வேண்டும்,

(1) உத்தாமணி துளசி தும்பை சமனிடை யெடுத்து ஒரு அவுன்ஸ் சாற்றில் 1. 2, 3, மாத்திரை சேர்த்து 3 நாள், 7 நாள் கொடுக்க (டைபாயிட் சுரம், மலேரியா சுரம், முறைக் காய்ச்சல்) முதலிய சுரங்கள் தீரும்.

இஞ்சிச்சாறு களஞ்சி ஒன்று தேன்களஞ்சி ஒன்று கலந்து ஷை மாத்திரையை அனுப்பானித்து உட்கொள்ள குளிர் சுரம் அஸ்தி சுரங்களெல்லாந் தீரும். இன்னும் வாய்வுகள் சூலைகள் கைகால்பிடிப்பு முடக்கு ஆகியவைகளும் தீரும்.

இதில் மூன்று மாத்திரைகளை பொடித்து புளியம் புரணி நெருப்பில் போட்டு புகைத்து புகை வெளியிற் போகாத படி துப்பட்டியால் போர்த்திக் கொள்ள வேண்டும்: ஆனல் இந்தப் புகையானது கண், மூக்கு, வாய் ஆகியவைகளில் செல்லாமல் சாக்கிரதையாயிருக்க வேண்டும். இவ்விதம் மூன்று அல்லது ஐந்து வேளைகள் மாலையில் செய்து உடனே, இள வென்னீரில் குளித்துக் கொள்ளவே தோலைப்பற்றிய ரோகங்கள் சூலைகள் வாய்வுக்கள், முடக்கு வியாதிகள், உளச்சல் கடுப்பு வலிகள் வீக்கங்கள் முதலியவைகள் தீரும். சன்னி தோச முதலிய கடுமையான எவ்விதச் சுரங்களுக்கும் மேற் கண்டபடி புகை பிடிக்கத் தீரும். ஆனல் குளித்தல் கூடாது,

(2) பரங்கிப் பட்டை சூரணம் களஞ்சி 1 தேன்களஞ்சி 1 கலந்து ஷை மாத்திரையை அனுப்பானித் துண்ணமேக வகைப்புத்துக ளெல்லாந் தீரும்.

(3) பொன் முசுட்டைச்சாறு களஞ்சி 1 தேன்களஞ்சி 1 கலந்து 3 குளிகை வீதம் 3 நாள் காலையிலுண்ண மது மேகம், நீர் மேகம், நீர் பேதி வெகு மூத்திர ரோகம் (நீரில் சர்க்கரை) முதலிய நீரைப்பற்றிய எல்லா ரோகமும் தீர்ந்து தேக திடம், தேகபலம் ஆகியவைகள் உண்டாம்.

(4) ஆவின்பால் படி மாகாணியில் 3 குளிகை வீதம் 3 நாள் காலையிலுண்ண பிரமேகம் தீரும்.

(5) மாதளம் பூச்சாறு களஞ்சி 1 தேன் களஞ்சி 1 கலந்து ஷை மாத்திரைப்படி அனுப்பானித் துண்ண நூல் மேகந் தீரும் (தாளைக்குருத்தும் உபயோகிக்கலாம்),

(6) நத்தைச் சூரி வேர்ப் பட்டை களஞ்சி 2 இதனைச் சிதைத்து ஒரு ஆளாக்கு தண்ணீர் விட்டு 1/3 பாகமாக சுண்டக் காய்ச்சி வடிகட்டி அதில் ஒரு களஞ்சி தேனையும் கலந்து ஷை மாத்திரை பிரமாணப் படி அனுப்பானித் துண்ண சதையடைப்பு நீர்த்தாரையிலுள்ள துர்மாங்கிசங்கள் கல்லடைப்பு ஆகியவைகள் தீரும்.

(7) பருத்திக் காயை இடித்துப் பிழிந்த சாறு களஞ்சி 2, தேன் பாதி கலந்து ஷை மாத்திரையை பிரமாணப் படி அனுப்பானித் துண்ண ரத்த மேகம், சீழ் மேகம், தந்து மேகம் ஆகியவைகள் தீரும் (பருத்திக் காய் இல்லா விட்டால் மாதளம் பழம் உள்ளிருக்கும் சோறு, எலுமிச்சம் பழம் பருமன் எடுத்து அரைத்து ஒரு அவுன்ஸ் தண்ணீரில் கரைத்தும் தேன் சேர்த்தும் கொடுக்கலாம்),

(8) குப்பை மேனிச்சாறு களஞ்சி 1, தேன் களஞ்சி 1, நெய் களஞ்சி 1, கலந்து ஷை மாத்திரைப் பிரமரணப்படி அனுப்பானித்து 3 நாள் காலையிலுண்ண காச ரோகம் தீரும்.

(9) தூதுவளைப் பழத்தை உலர்த்தி யிடித்த சூரணம் களஞ்சி 1, நெய் களஞ்சி 1 இவை கலந்து ஷை மாத்திரையை பிரமாணப் படி அனுப்பானித்து 3 நாள் காலையிலுண்ண சயரோகம் தீரும். நோய்க்குத் தக்கவரறு 7 வேளை வரை கொடுக்கலாம்.

(10) கையான் தகரைச்சாறு களஞ்சி 1, தேன்களஞ்சி 1, கலந்து ஷை மாத்திரையை பிரமாணப்படி அனுப்பானித்து 3 நாள் உண்ண பீநிச ரோகங்கள் தீரும்.

(11) கருவிழுதிச் சாறு களஞ்சி 1, தேன்களஞ்சி 1, நெய் களஞ்சி 1. கலந்து ஷை மாத்திரையை பிரமாணப்படி அனுப்பானித் துண்ண 1. காமாலை, 2 சோகை, 3 பாண்டு, 4 மகோதரம் 5 பெரு வயிறு, 6 நீராம்பல், 7 கவுசை 8 விசபாண்டு முதலிய ரோகங்க்ள் தீரும்.

தைவேளை சமூலச்சாறு களஞ்சி 1, தேன்களஞ்சி 1, நெய் களஞ்சி 1, ஷை மாத்திரையை பிரமாணப்படி அனுப்பானிக்க ஒரு வேளையில் விஷமனைத்துந் தீரும், மூர்ச்சையுற்றிருந்தால் அடியில் கண்ட நசியம் செய்து அல்லது (ஆக்ராணசஞ்சீவி) மூக்கில் வைத்து குழாயால் ஊதி அல்லது கண்கலிக்கம் போட்டு பிரக்ஞை வந்த பின் மருந்து கொடுக்கவும்.

தமிழ்நாடு அரசு காப்பக நூலகம்
209561
சென்னை-600 008

ஆராய்ச்சிப் பகுதி:

அகத்தியர் குழம்பு

வைத்திய பூபதி G. கண்ணுசாமிப் பிள்ளை-திருவாரூர்

நமது "அமுது பத்திரிகையில்" "அகத்தியர் குழம்பு" பற்றிய விவரங்கள் பல கண்டேன். காஞ்சீப மன்னனின் ஏககுமாரனுகிய கௌசிகன் சென்ற 3000 ஆண்டுகளுக்கு முன்னிருந்த மத்திய ஆசிய மக்களின் போதனையில் இள வரசு பட்டம் பெற இயலாமலும் வெளியேறி விசுவாமித் திரன் என்ற புனை பெயர் சூடிய ரிஷியாக வந்ததும் அரிச் சந்திரன் போன்ற மன்னர்களின் கொள்கையையே எதிர்த்து வாதாடி தோல்வியுறச் செய்யும் தனது க்ஷத்திரிய பிறவிக் குணத்தால் ஸ்ரீ முருகனின் சிஷ்யனுன தமிழ் அகத் தியனிடம் எதிர்த்து, மக்கள் உடலில் ஏற்படும் சகல நோய் களுக்கும் வாயுக்களின் மிக்க குறைவான வல்லியக்கமே காரணமாகையால் பத்து சரக்குகளும் அதனேடு கூட்டுச் சரக்காய் யாதேனும் ஒன்றையும் சேர்த்த ஒரே மருந்தால் சகல வியாதிகளையும் போக்கும் படியான மருந்தொன்று செய்ய இயலுமா? என்று அகத்தியரிடம் வாது பேசிய நேரத்திலே கௌசிகனை நோக்கி வாயில் அறைந்தாற் போல் பேசி தமிழ் அகத்தியர் சொல்வார்:—

நீ "பேசிய மருந்து கேளாய் பெருங்காயம் கடுகிந்துப்பு
வீசியரசம் வெங்காரம் விட மனேசிலை யுமோமம்
ஆசிலாவரிதாரத் தாடருங்கருஞ் சீரகந்தான்
மாசிலாமருந்து பத்தும் வகைவகை கழஞ்சுவாங்கே

வாங்கிய கழஞ்சுக் கொப்ப வாளமும் வறுத்துப்பாதி
தாங்கிய பச்சைபாதிசமன் முளை போக்கிநீயும்
தீங்கிலா மருந்து பத்துஞ்சேர்த்துமே யரைக்கக் காந்தும்
ஓங்கிய மோருஞ் சோறு முண்டு பின்னரைத்துக்கூட்டே"

இதில் உள்ள சரக்காவன: பெருங்காயம், கடுகு ரோகிணி, இந்துப்பு, இரசம், வெங்காரம், விடம் (நாவி), சிலை, ஓமம், அரிதாரம், கருஞ்சீரகம் வாளம். வாளமும் வறுத்துப் பாதி என்றமையால் வறுக்கும் சரக்குகளாகிய பெருங்காயம், கடுகு ரோகிணி, நாவி, ஓமம்; கருஞ்சீரகம்

ஆகிய ஐந்து சரக்குகளையும் வறுத்துச் சூரணம் செய்து கொண்டு அச்சூரணத்துடன் மற்ற ஐந்து சரக்குகளாகிய இரசம், காரம், சிலை, வெங்காரம், இந்துப்பு ஆகியவற்றைச் சுத்தி செய்து கொண்டு வரிசைப்படி ஒவ்வொன்றாகச் சேர்த்து அரைத்துக் கலந்தப்பின், வாளத்தை நன்கு சுத்தி செய்து அதில் ஐந்து கழஞ்சுவாளத்தை கருஞ்சிவப்பாக வறுத்தும் மீதி அஞ்சு கழஞ்சுவாளத்தை (சுத்தி செய்ததை) வறுக்காமலும் சேர்த்து சாமக்கணக்கின்படி அரைத்து சிமிளில் அடக்கம் செய்து அளவுப் படியும் அனுபானம் கொடுத்து வர வேண்டியது. இதை விட்டு மேற்படி பாட்டில் தாங்கிய "பச்சை" பாதி என்று சொல்லியிருப்பதைக் கொண்டு பச்சை யென்பது தனிச் சரக்கென கற்பனை செய்வது சரியல்ல; சரியிடை வாளம் சேர்வதால் சரக்குடன் பாதியை வருத்தால் கபாட குணம் ஏற்பட்டு அதிகம் பேதி யாகாமல் இருக்கவுமான நோக்கமே யன்றி வேறல்ல.

[52-ம் பக்கத் தொடர்ச்சி]

வேலைத் துறைகளை வகுத்துச் செய்ய வேண்டு மென்பது இம் மகா நாட்டின் முக்கியமான கருத்து என்பதை எடுத்துக் காட்டினார்.

பின்னர் வரவேற்புக் குழுச் செயலாளர் கவிராஜ் T. C சுந்தரம் பிள்ளை யவர்கள், மகா நாடு நடத்த இடந் தந்தும் மற்ற வசதிகளும் தந்துதவிய C S M. பள்ளியின் "மானேஜர்" திரு. T. மனுவேல் அவர்கட்கும், பல் வேறு ஜில்லாக் களிலிருந்தும் சிரமம் பாராட்டாது வந்து இரண்டு நாள் மகா நாட்டை வெற்றிகரமாக நடத்திக் கொடுத்த சித்த வைத்தியப் பிரதி நிதிகளுக்கும், இரு நாட்களிலும் முகங் கோணமல் அலுப்பில்லாமல் உழைத்து மகா நாட்டுக்கு வந்திருந்த பிரதிநிதிகளின் வசதிக்கு ஆவன செய்த தொண்டர்களுக்கும் மகா நாட்டின் வரவேற்புக் குழு சார்பாக வந்தனத்தைத் தெரிவித்துக் கொண்டார்.

இத்துடன் மகா நாடு மாலை 6 மணியளவில் இனிது முடிந்தது.

ஓம்

திருமூலர் ஞான கற்பம் 500

காப்பு

சூத்திரமோது முன் சொல்வேன் கணேசன்காப்பு
சாத்திர நிறைந்து பொங்கிச்சராசர மெங்குந்தானுய்
தோத்திரப் பொருளுந்தானுய் சொல்லற்று மவுனமுற்று
போத்திரப்புறம் புள்ளான பூரணங்காப்புத் தானே

நூல்

வியாதிகள் போக வெகு நாட் சடமுறப்
பயா தித்திரைநரை பாங்காய் தவிர் ந்திட
கயா திக்கவனம் கலந் தெங்குஞ் சுற்றிட
அயாதிய ஞானமஞ்சாகுஞ் சித்தியே (1)

அஞ்சியூ தியழியாமல் காயத்தை
மிஞ்சியே கற்பம் விளம் பினேம் நூற்றெட்டு
தஞ்சமுறவே தான் தின்னவல்லாற்குப்
பஞ்சநரை போய்ப்ப தின்கோடி வாழ்வரே (2)

வாழ்வ தொன்றல்ல மகா சித்தி யெட்டுமாம்
கேழ்வ தென்றெண்ணிக் கெடுக்காதே மாண்பரே
தாழ்வ தொன்றில்லைச் சதகோடிவேதையாம்
ஆழ்வதே வேதையது காணுங் கற்பமே (3)

கற்பமே தென்று கசடரே யெண்ணுதே
யற்பமுமல்லவ கண்ட சித்தி
சொற்பமுமல்ல தொடு முனவலோகம்
மற்படுந் தங்கமாற்றுப் பதினுறே (4)

பதினுறு மாற்றுப் போல் பாலனு முன்தேகம்
விதி நாலுகையோன் மெய்யெழுத்தைப் பொய்யா
மதி சூடு மீசன் வகுத்த முறைபாடு
கதியாறவுண்டு கட்டாய் சமாதியே (5)

மூலம் மேல் மூலசுத்தி.

சமாதிக்கு முன்செய்யுஞ் சாங்க வகைகே
ளமாதி தவம் பிகையாலே மலம் போம்
புமாதி தகுஞ்சரன் போக்கும் வழிலையை
தமாதி தகும்பகம் சமபிராணுயமே (6)

ஆமேயிது முன்னடைவாகத் தீர்ந்தபின்
போமே புருவமையம்பு கட்டிய தீபமாய்
ஓமேபரத்திலு றவரய் மனஞ் சேரும்
தாமே சிவமாம் தனிச் சிவமில்லையே (7)

யோகம்

இல்லை யிதயத் தேயிறுக் கியேபாராமல்
மல்லையத்த மதிகெட்டலை யாதே
தில்லை யெழுத்தினைச் சேர்த்திடுமா யோகம்
வல்லையார் சரவழிமரர்க்க மூக்கெண்ணே (8)

மூக்கு நுனியிலே மூட்டு மனத்தை நீ
மூக்கினிடையே முழங்கு ம்சபை தான்
மூக்கிடை விட்டு முன்னேடிப் பேரகாது
மூக்கி னொளி யோடி முட்டும் பிர்மாண்டமே (9)

பிர்மாண்ட முட்டிப் பேசுமே முன்னின்று
கர்மாண்ட கண்டங்க ருகிப்பொடியாச்சு
தர்மாண்ட மோட்சந்தனியாம் பரத்துள்ளே
நிர்மாண்ட சித்தாய் நிலைத்திட மூலியே (10)

கற்பங்கள்

மூலிகை கற்ப முயன்ற தறுபதும்
பாலியுபரசம் பாங்காய றுபதும்
வாலிய சூதம் தங்கமிரண்டும்
ஓலி யொருநூற்றிருபத் திரண்டே (11)

ஒண்ணுன கற்பத் தையுண்ணுத மாண்பர்கள்
கண்ணுனவே தைக்குக் கலங்கிய லைவார்கள்
பண்ணுன கற்பம் பதித்திடுமேனியில்
தண்ணுய் நவலோகஞ் சாயப் பசும் பொன்னே (12)

பொன் தான் பிறந்தது புகழான கற்பத்தில்
பொன் தான் பிறந்தது போராம் துரிசினில்
பொன் தான் பிறந்தது புகழான சூதத்தில்
பொன் தானு பரசுப்போக்கில் பிறந்ததே (13)

(1-வது) கற்ப வரிசை

பிறத்திடுங் கற்பந்தான் பேருகத்தின் கையில்
கறந்திடும் வாமமும் கடுமலமே போக்கி
முறந்து வழலையு முன்பித்தமும் நீக்கித்
திறந்து கடுக்காயைத் தின்றிட ஆனியே (14)

[illegible] மாத அனுப்பானம்
[illegible] வெல்லத் திலருந்திடு
மூனி யாவணி [illegible]யு மிந்துப்ப தாம்
கானிய வைப்ப சிகார்த்திகை சர்க்கரை
மேனிய கடுக்காய்க் கனுப்பானஞ் சொல்வதே (15)

[தொடரும்]

தமிழ்நாடு அ... [illegible]
209561
சென்னை 600 008

புதிய, பழைய.

தமிழ் வைத்திய புத்தகங்கள்

விலைக்கு வாங்கப்படும்

மே. மாசிலாமணி வைத்தியர் புத்தகங்கள்
தேரையர் புத்தகங்கள், ஏடுகள்
அப்துல்லா சாயபு வைத்திய நூல்கள்
பதார்த்த குணக் கொத்து (சேனாதிபதி பிள்ளை) etc.

சகல வைத்திய புத்தகங்களும் விலைக்கு வாங்கப்படும்.

விலாசம்:—

சாது தேவதாஸ்,
4/27, பிராட்வே, சென்னை.

சி. வை. கல்லூரி புத்தக சாலை.

உங்களுக்குத் தேவையில்லாத தமிழ் வைத்திய புத்தகங்கள் இவ்விடம் அனுப்பினால், உங்கள் பெயரால் அவற்றைப்பதிவு செய்து புத்தக சாலையில் அமைத்து, நீங்களும், மற்ற வைத்திய நண்பர்களும் பயன் படுத்துமாறு பாதுகாக்கப் படும். கல்லூரிக்கு மாத்திரமல்ல, அவை மத்திய சித்த வைத்திய கழக ஆராய்ச்சி புத்தக சாலையாகவும் பயன் படும். விலை மதிக்கப்படாத அநேக தமிழ் வைத்திய புத்தகங்கள் நமக்குப் பின் பாதுகாப்பாரின்றி மண் செல் முதலிய அரித்து உபயோகிப்பார் இல்லாமல் குப்பைகூழங்களாகி பல சரக்குமடிக்கும் கடிதங்கள் ஆகா முன்னரே, தாங்கள் இருக்கும் போதே அவற்றை நன்கொடையாகக் கொடுத்து என்றும் அழியாப் புகழும், சென்னை மாநில வைத்திய ஆராய்ச்சியாளர் நல் ஆசியும் பெற்று நல்வாழ்வு வாழ ஈசன் துணைபுரிவாராக. தாங்கள் அனுப்பும் புத்தகங்கள் நன்கொடையாளர் பேர்களுடன் முதலில் அமுதுவில் பிரசுரிக்கப் பட்டு பின் புத்தகங்களில் அச்சிட்டு பத்திரப் படுத்தப்படும்.

—தலைவர்,

சி. வை. கல்லூரி, தாசர்புரம் P.O.
தின்னனூர் R.S. — செங்கல்பட்டு ஜில்லா.

CENTRAL SIDDHA MEDICAL COUNCIL

RULES AND REGULATIONS

1. For the purpose of registraition of the Council, the number of members is declared as 30 The Council hereinafter mentioned may whenever the business of the council requiras it, register an increase of its members.

2. The council is established for the purposes expressed in the Memorandam of the council.

3. The membership shall be generally limited to persons referred to in Para 3. of the Memo-randum, either individuals or representatives of Siddhas Vaidya Sangams, who shall subscribe annually Rs. 5/- per member and this amount is to be paid before the 31-st of March every year (the official year for the Council being the calender year - 1st Jan. to 31-st Desember.) Life members ahall pay Rs.60 only; if in instalments the subscription shell be paid within one year from the date of enrolment as life member.

4. Patrons shall give a minimum donation of Rs. 100/- and contiune their financial and moral support for all important undertakings of the Council.

சித்த வைத்திய மத்திய கழகம்

தென் இந்தியாவிலுள்ள எல்லா சித்த வைத்திய சங்கங்களும் ஒவ்வொன்றாக இணைக்கப்பட்டு வருகிறது. மத்திய கழகம் ஒழுங்காகவும், ஊக்கத்தோடும் சித்த வைத்தியத்திற் கென்று உழைக்க எல்லா சங்கங்களும் விரைவில் இணைக்கப்பட வேண்டும். திருநெல்வேலி. கோயம்பத்தூர், வடஆற்காடு, செங்கல்பட்டு, பழனி, ராமநாதபுரம், தஞ்சாவூர் முதலிய ஜில்லாக்களிலுள்ள சங்கங்கள் பிரதிநிதிகள் அனுப்பி இணைத்துக் கொண்டனர். இன்னும் சில ஜில்லாக்கள் ஊக்கமாய் உழைத்து தங்களுடைய பிரதிநிதிகளையும், வருஷ சந்தாவையும், அனுப்பிவையுங்கள்; அதோடு அமுதுவை ஒவ்வொரு சங்கமும் வரவை[illegible] ஆதரிக்கவும், அதன் மூலம், தென் இந்தியாவில் சித்த (தமிழ்) வைத்திய சம்பந்தமாக நடைபெறும் சகல விஷயங்களும் அறிந்து நன்[illegible]ய்டையவும், வேண்டுகிறோம்.

—கழகக் காரியதரிசி.

Edited & Published by Siddha Dr. H. Devadoss, B.A., L.T., M.T.Sc.
Printed by Sri Subbalakshmi at Sundaram Press,
25, Chandrappa Mudali St., Sowcarpet, Madras-1.